# அகரமுதலி வரலாறு

திருமூலரின் திருமந்திரத்தில் **அகராதி** என்னும் சொல் முதன்முதலாக இடம்பெற்றுள்ளது.

**திருமந்திரம்**

ஐந்து கலையில் அகராதி தன்னிலே

வந்த நகராதி மாற்றி மகராதி

நந்தியை மூலத்தே நாடிப் பரையோடும்

சந்திசெய் வார்க்கும் சடங்கு இல்லை நாதனே

**– திருமூலர்**

**பொருள்**

- நீக்கல்
- நிலைப்பித்தல்
- நுகர்வித்தல்
- அமைதியாக்கல்
- ஆக்கல் ஆகிய ஐந்து திருவருள் ஆற்றல்களால் செலுத்தப்படுவன அகரமுதலி எழுத்துக்கள்.
- நமச்சிவாயா என்பதை சிவாயநம எனக் கணித்தல் வேண்டும்.
- மகர முதல்வனாகிய நந்தியை மூலத்திடத்து நாடித் திருவருளோடும் சேர்த்து வழிபடுபவர்களுக்குப் புறச் சடங்குகள் வேண்டா.
- அகராதி நிகண்டு என்னும் நூலே அகரமுதலி தோன்றுவதற்கு திருப்புமுனையாக அமைந்தது.
- வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியே தமிழில் தோன்றிய முதல் **அகர முதலி** ஆகும். இது கி.பி. 1732– இல் வெளிவந்தது.
- சதுர் – நான்கு என்பது பொருள். பெயர்,பொருள், தொகை, தொடை என நான்கு வகைகளில் பொருள் விளக்கம் இந்நூலில் தரப்பட்டுள்ளது.

மேலும் வீரமாமுனிவர்,

- தமிழ் – லத்தின் அகராதி,
- லத்தின் – தமிழ் அகராதி
- தமிழ் – பிரெஞ்சு அகராதி
- பிரெஞ்சு – தமிழ் அகராதி போர்த்துகீசிய லத்தின் – தமிழ் அகராதி போன்றவற்றை உருவாக்கினார்.
- லெவி – ஸ்பால்டிஸ் என்பவரால் தமிழ் அகராதி உருவாக்கப்பட்டது.
- யாழ்ப்பாணம் கதிரை வேலனாரால் தமிழ் சொல்லகராதி வெளியிடப்பட்டது.
- இராமநாதன் என்பவரால் படங்களுடன் கூடிய இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் அகராதி வெளியிடப்பட்டது.
- வின்சுலோ என்பவரால் தமிழ், ஆங்கில பேரகராதி தொகுத்து வெளியிடப்பட்டது.
- 1925–ஆம் ஆண்டு பவானந்தத்தின் தற்கால தமிழ் சொல்லகராதி வெளியிடப்பட்டது.
- 1937–ஆம் ஆண்டு மதுரை தமிழ் பேரகிராபி வெளிவந்தது.
- 1985–ஆம் ஆண்டு தமிழ் தமிழ் அகர முதலி தமிழ்நாட்டு பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.
- இருபதாம் நூற்றாண்டில் வெளிவந்த மிகப்பெரிய அகரமுதலி சென்னை பல்கலைக்கழக அகராதி ஆகும்.
- இது தமிழ் லெக்சிகன் என்ற பெயரில் ஆறு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளது.
- 1985–ஆம் ஆண்டு தேவநேய பாவாணரின் செந்தமிழ் சொற்பிறப்பியல் பேர அகராதியின்



TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

முதல் பதிப்பும், 1993 ஆம் ஆண்டு படங்களுடன் கூடிய இரண்டாம் பதிப்பும் வெளிவந்தது.

- இது கணினி உதவியுடன் உருவாக்கப்பட்டு, வந்த முதல் தமிழ் அகரமுதலி ஆகும். தற்போது பலபதிப்பகங்கள் அகர முதலிகளை வெளியிட்டு வருகின்றன.
- இன்றைய மக்களுக்கு பண்டை இலக்கிய இலக்கணங்களில் சொல்வளம், பொருள்ஆழம் போன்றவற்றை அகர முதலிகள் விளக்குகின்றன.
- இலக்கியங்களில் சொல்லப்பட்டுள்ள பெயர்கள், கதைகள், வரலாறுகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றிற்கான விளக்கங்களை கலைகளஞ்சியங்கள் தருகின்றன.
- 1902–ஆம் ஆண்டு வெளியான கலைக்களஞ்சியத்தின் முன்னோடியான அபிதான கோசம் இலக்கிய புராண இதிகாச செய்திகளை தருகின்றது.
- 1934–ஆம் ஆண்டு சிங்காரவேலனாரால் வெளியிடப்பட்ட அபிதான சிந்தாமணி இலக்கிய செய்திகளோடு, அறிவியல் துறை பொருள்களுக்கும் விளக்கம் அளிக்கிறது.
- தமிழ் வளர்ச்சி கழகம் 10 தொகுதிகள் அடங்கிய முதல் கலைக் களஞ்சியத்துடன், குழந்தைகள் கலைக் களஞ்சியம், நாடக கலைக் களஞ்சியம், இஸ்லாமிய கலைக் களஞ்சியம் போன்ற பல கலைக் களஞ்சியங்களை வெளியிட்டுள்ளது.
- துறை சார்ந்த புதிய சொற்களுக்கு விளக்கம் தருவது கலைச்சொல் அகர முதலியாகும்.
- 1960–ம் ஆண்டு கலைக்கதிர் நிறுவனத்தால் பொது அறிவு, உளவியல், புவியியல், புள்ளியியல், வரலாறு, வானவியல் முதலிய துறைகளுக்கு அகரமுதலிகள் தொகுக்கப்பட்டன.
- மணவை முஸ்தபா அறிவியல் துறைக்கான கலைச் சொல் அகர முதலியை தொகுத்து வெளியிட்டார்.
- 1991 ஆம் ஆண்டு அறிவியல் கலைச்சொல் களஞ்சியம் வெளியிடப்பட்டது.
- மொழியின் வளர்ச்சிக்கேற்ப அகர முதலிகள் சொற்பொருள் மாற்றங்களுடன் வெளியிடப்படுகின்றன.

| **அகராதி** | **உருவாக்கியவர்கள்** |
|---|---|
| சதுர அகராதி | வீரமாமுனிவர் |
| தமிழ் ஆங்கில அகராதி | பெப்ரீஷியஸ் |
| பட அகராதி | இராமநாதன் |
| தமிழ் சொற்பிறப்பியல் ஒப்பியில் அகராதி | ஞானபிரகாச அடிகள் |
| திராவிட சொற்பிறப்பியல் அகராதி | ப்ரோ, எமினோ |
| பழமொழி அகராதி | பெர்சிவல் |

**நிகண்டுகள்**

- நிகண்டு என்பது வடசொல்.
- இச்சொல்லுக்கு தமிழில் சொற்றொகை
- தொகுப்பு அகராதி
- தொகை அகராதி
- தமிழ்ப்பா அகராதி
- தொகுதி
- கூட்டம் என பல பொருள்கள் உள்ளன.
- தமிழ் உள்ள சொற்களைப் பல்வேறு பகுப்புகளுக்கு உட்படுத்தி, அவற்றிற்குரிய


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in

பொருளை பாடல் வடிவில் இந்த அகராதிகள் தந்தன.

- முதலில் தோன்றிய நிகண்டு சேந்தன் திவாகரம்.
- நிகண்டு நூல்களுள் மிகச் சிறந்ததாக சூடாமணி நிகண்டைக் கூறுவர்.

**நிகண்டுகள்**

| | |
|---|---|
| திவாகரம் | திவாகரர் |
| பிங்கல நிகண்டு | பிங்கலர் |
| சூடாமணி நிகண்டு | மண்டல புருடர் |
| அகராதி நிகண்டு | சிதம்பர ரேவணச் சித்தர் |
| கயாதர நிகண்டு | கயாதரர் |
| உரிச்சொல் நிகண்டு | காங்கேயர் |

www.tnpscgroup4.in


TNPSC தேர்விற்கான புத்தகங்களை பதிவிறக்கம் செய்ய www.tnpscgroup4.in